**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2056, திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 04–ம் தேதி**
**2026– ம் ஆண்டு மார்ச் மாதம் 18–ம் நாள் புதன்கிழமை**

**IA No.2/2024**
**in**
**OS no.43/2024**
**–––**

1.A.காளிஸ்வரி
2.அய்யணன் ....மனுதாரர்கள்/வாதிகள்

**/எதிர்/**

1.மூர்த்தி
2.R.முத்துவிஜயபாண்டியன்
3.பாமா
4.ஹரி
5.மைனர் பிரபஞ்சன்
(5ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதி தன் தாயாரும் இயற்கை பாதுகாவலருமான 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி பாமா மூலமாக)
6.உயர்திரு வட்டாட்சியர் அவர்கள்
திருப்புவனம் வட்டாட்சியர் அலுவலகம்
திருப்புவனம் .....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
(IA No.5/2024ன் உத்தரவு நாள் 01.09.2025ன் படி திருத்தம் செய்யப்பட்டது)

இம்மனு என் முன்பாக 12.03.2026–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருD.அருள்ஜோசப் அவர்கள் ஆஜராகியும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.தங்கவேலன் அவர்கள் ஆஜராகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

தாவாச் சொத்தை அளந்து பார்த்து அதன் இயற்கை கூறுகளை ஆராய வேண்டி நீதிமன்ற ஆணையாளரை நியமித்து அவர் மூலம் தாவா சொத்தை சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு, அளந்து அதன் வகைப்பாடு கண்டு மற்றும் அதன் இயற்கை கூறுகளை ஆராய்ந்து அதிலுள்ள மேற்கோப்புகளையும் ஆக்கிரப்பு பகுதிகளையும்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.18 15:43:29 +0530

ஆராய்ந்து அறிந்து, அத்துமால் கண்டு, வரைபடத்துடன் கூடிய ஒரு விரிவான அறிக்கையை தாக்கல் செய்து உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9ன் கீழ் மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்:**

இந்த மனுவில் மனுதாரர் அசல் மனுவில் 1–ம் வாதி ஆவார். 2ம் மனுதாரர் / 2ம் வாதி அவரது கணவர் ஆவார் அவருக்காகவும் இந்த மனுவை தாக்கல் செய்கிறார். தாவா சொத்தானது 2ம் வாதி கணவர் அய்யணன் அம்பலம் என்பவருக்குப் பாத்தியப்பட்டதாகும் என்றும், 2ம் மனுதாரர் அய்யணன் அம்பலம் பெயரில் பட்டா எண் 473–ன் கீழ் பட்டா ஏற்பட்டு தாவாச் சொத்தை 2ம் மனுதாரர் அய்யணன் அம்பலம் தன் சொந்த அனுபவத்திலும் பாத்தியத்திலும் வைத்து ஆண்டனுபவித்து வந்தார் என்றும், இந்நிலையில் 1ம் மனுதாரரின் கணவர் அய்யணன் அம்பலம் கடந்த 23.05.2024–ம் தேதி தாவாச் சொத்தை 1ம் மனுதாரருக்கு தானமாக எழுதிக் கொடுத்து விட்டார் என்றும், தாவாச் சொத்திற்கு 1ம் மனுதாரரின் பெயரிலேயே பட்டா எண் : 608 ன் படி பட்டா மாறுதல் செய்யப்பட்டு தாவாச் சொத்து தற்போது 1ம் மனுதாரரின் சொந்த அனுபவத்திலும் பாத்தியத்திலும் உள்ளது என்றும், 1ம் மனுதாரர் தாவாச் சொத்தை அவரது சொந்த அனுபவத்திலும் பாத்தியத்திலும் வைத்து 1ம் மனுதாரர் அவரது கணவருடன் அனுபவித்து வருகிறதாகவும், தாவா சொத்திற்கு வடக்கே இந்த சர்வே எண் 238/29–ல் கட்டுப்பட்ட 1–ம் எதிர்மனுதாரர்/ 1ம் பிரதிவாதி மற்றும் 1–ம் எதிர்மனுதாரர்/ 1ம் பிரதிவாதியின் சகோதரரர் மு.சந்திரனுக்கு கூட்டாக மனையிடம் உள்ளது என்றும், அதில் 1–ம் எதிர்மனுதாரர்/ 1ம் பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றும், அதேபோல் தாவா சொத்திற்கு தெற்கே 2–ம் எதிர்மனுதாரர்/ 2ம் பிரதிவாதி மற்றும் 2–ம் எதிர்மனுதாரர்/ 2ம் பிரதிவாதியின் சகோதரரும், 3ம் எதிர்மனுதாரர்/ 3ம் பிரதிவாதியின் கணவரும் ஆன வைரவமூர்த்திக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட, மேற்படியாளர்கள் பெயரில் கூட்டாக பட்டா தாக்கலாகியுள்ள மனையிடம் உள்ளது என்றும், அதில் 2–ம் எதிர்மனுதாரர்/ 2ம் பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வைரவமூர்த்தியின் சட்டபூர்வமான வாரிசுகள் என்பதால் மேற்படி 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தேவையான தரப்பினர் என்ற அடிப்படையில் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றும், தாவா சொத்தானது 1ம் மனுதாரரின் கணவர் 2ம் மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்டு அவரது பெயரில் பட்டா

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.18 15:43:35 +0530

தாக்கலாகியிருந்த நிலையில் 1ம் மனுதாரரின் கணவர் அய்யணன் அம்பலம் தாவா சொத்தில் குடிசை வீடு கட்டியும், தங்களுடைய ஆடு மாடுகளை கட்டி வைத்தும் தாவா சொத்தில் முருங்கை உள்ளிட்ட மரங்கள் நட்டு வைத்தும் தாவா சொத்தை அவரது சொந்த அனுபவத்தில் வைத்து ஆண்டனுபவித்து வந்தார் என்றும், இந்நிலையில் 1ம் மனுதாரரும் அவரது கணவரும் கடந்த சில வருடங்களுக்கு முன்பு 1ம் மனுதாரரின் கணவரின் வேலை விசயமாக தங்கள் குடும்பத்துடன் வெளியூர் சென்றிருந்த நிலையில் 2–ம் எதிர்மனுதாரர்/ 2ம் பிரதிவாதி தனது மனை வீட்டிற்கு வடக்கே தனது வீட்டை ஒட்டி கிழமேல் 10 அடி, தென்வடல் 10 அடி அளவில் ஓட்டு வீடு ஒன்றை கட்டியுள்ளார் என்றும், அதேபோல் 1–ம் எதிர்மனுதாரர்/ 1ம் பிரதிவாதி அவரது வீட்டிற்கு தெற்கே கிழமேல் 4 அடி, தென்வடல் 4 அடி அளவில் பாத்ரூம் ஒன்றை கட்டினார் என்றும், தாங்கள் சில காலங்கள் கழித்து தனது வீட்டிற்கு வந்து பார்த்த போது 1, 2 எதிர்மனுதாரர்கள்/ 1, 2 பிரதிவாதிகள் தங்களுக்குப் பாத்தியப்பட்ட தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்த விவரம் தெரிய வந்தது என்றும், இது சம்பந்தமாக தனது கணவர் அய்யணன் அம்பலம் 1,2எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகளை அனுகி இப்படி தங்களுக்குப் பாத்தியப்பட்ட பட்டா இடத்தை ஆக்கிரமித்துள்ளீர்கள் மேற்படி ஆக்கிரமிப்புகளை உடனே அகற்றி தாருங்கள் என்று கேட்டதற்கு எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தான் கட்டிய வீடும், 1–ம் எதிர்மனுதாரர்/ 1ம் பிரதிவாதி தான் கட்டியுள்ள பாத்ரூம் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலத்தில் தான் வருகிறது என்று கூறினார்கள் என்றும், மேலும் 1, 2 எதிர்மனுதாரர்கள்/ 1,2 பிரதிவாதிகள் வேண்டுமென்றால் சர்வே செய்து தங்கள் சொத்தை அளந்து எடுத்துக் கொள்ளுங்கள் என்றும் சர்வே செய்த பின் 1ம் பிரதிவாதி கட்டிய பாத்ரூம், 2ம் எதிர்மனுதாரர்/ 2ம் பிரதிவாதி கட்டிய ஓட்டு வீடும் தங்களின் தாவா சொத்திற்குள் வந்தால் அதை தாங்கள் இடித்துக் கொடுத்து விடுவதாகத் தெரிவித்தார்கள் என்றும், மேற்படி 1, 2 எதிர்மனுதார்கள்/ 1, 2 பிரதிவாதிகளின் பேச்சை நம்பிய தனது கணவர் அய்யணன் அம்பலம் தாவாச் சொத்தை அளக்க ஏற்பாடு செய்தார் என்றும், இந்நிலையில் தனது கணவர் அய்யணன் அம்பலம் தாவாச் சொத்தை அளப்பதற்காக 6ம் பிரதிவாதி திருப்புவனம் வட்டாச்சியர் அலுவலகத்தில் பலமுறை மனுக்கொடுத்தும், திருப்புவனம் தாலுகா, மணலூர் கிராம சர்வேயர் தாவாச் சொத்தை அளக்க வரும்போதெல்லாம் 1, 2 எதிர்மனுதாரர்கள்/ 1,2 பிரதிவாதிகள் தனது கணவர் அய்யணன் அம்பலத்திடமும் சர்வேயரிடமும் வீண் பிரச்சனை செய்து தாவாச் சொத்தை அளக்கவிடாமல்

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.18 15:43:42 +0530

செய்தார்கள் என்றும், தாவாச் சொத்தை அளந்தால் 1,2 எதிர்மனுதாரர்கள்/ 1,2 பிரதிவாதிகள் தாவாச் சொத்தில் செய்துள்ள ஆக்கிரமிப்பு தெரிந்துவிடும் என்பதால் பிரதிவாதிகள் தாவாச் சொத்தை அளக்க விடாமல் தொடர்ந்து பிரச்சனை செய்து வந்தார்கள் என்றும், இந்நிலையில் தனது கணவர் அய்யணன் அம்பலம் கடந்த 2023–ம் வருடம் செப்டம்பர் மாத வாக்கில் 6ம் பிரதிவாதி திருப்புவனம் வட்டாச்சியர் அலுவலகத்தில் தாவாச் சொத்தை அளந்து அத்துமால் காண்பிக்க மனுக் கொடுத்தார் அதன்பேரில் FL : 360/2023–ல் திருப்புவனம் வட்டாச்சியர் அலுவலக்தில் 06.10.2023ம் தேதி தாவாச் சொத்தை அளக்க எனது கணவர் அய்யணன் அம்பலத்திற்கும் 1,2 எதிர்மனுதாரர்கள்/ 1, 2 பிரதிவாதிகள் மற்றும் பக்கத்து பட்டாதாரர்கள் என அனைவருக்கும் அறிவிப்பு வழங்கினார்கள் என்றும், ஆனால் 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தாவாச் சொத்தை அளக்க விடாமல் பிரச்சனை செய்தார்கள் என்றும், அதனால் தனது கணவர் அய்யணன் அம்பலம் கடந்த 06.10.2023–ம் தேதி பிரதிவாதிகள் மற்றும் சிலர் மீது திருப்புவனம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், ஆனால் காவல் நிலையத்தில் இது சிவில் சம்மந்தமான பிரச்சனை என்றும் அதனால் நீதிமன்றம் மூலம் தீர்வு காணும் படி தெரிவித்தார்கள் என்றும், இந்நிலையில் 1ம் மனுதாரரின் கணவர் அய்யணன் அம்பலம் தாவாச் சொத்தான S.No. 238/29–ல் கட்டுப்பட்ட சொத்தையும் மற்றும் S.No.238/43–ல் கட்டுப்பட்ட சொத்தையும் திருப்புவனம் வட்டாச்சியர், மணலூர் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மணலூர் சர்வேயர் அளந்து அத்துமால் காண்பிக்க உத்தரவிடக் கோரி மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் W.P.No. 6947/2024–ல் மனுத்தாக்கல் செய்தார் என்றும், அதன்பேரில் மாண்புமிகு நீதியரசர் அவர்கள் தாவாச் சொத்தையும் S.No. 238/43–ல் கட்டுப்பட்ட சொத்தையும் அளந்து அத்துமால் காண்பிக்கவும் போலீஸ் பாதுகாப்புடன் அளக்கவும் திருப்புவனம் வட்டாச்சியர் அவர்களுக்கு கடந்த 21.03.2024 ம் தேதி உத்தரவு பிறப்பித்தார் என்றும், மேற்படி மாண்புமிகு நீதியரசர் W.P.No. 6947/2024–ல் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் கடந்த 20.05.2024–ம் தேதி தாவாச் சொத்தை அளந்து அத்துமால் காண்பிப்பதற்காக திருப்புவனம் வட்டாச்சியர் அலுவலகத்தின் மூலம் எனது கணவர் அய்யணன் அம்பலம் மற்றும் 1, 2 எதிர்மனுதாரர்கள்/ 1, 2 பிரதிவாதிகள் மற்றும் ஏனைய பட்டாதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பட்டது என்றும், மேலும் திருப்புவனம் வட்டாச்சியர் அலுவலகத்தின் மூலம் போலீஸ் பாதுகாப்பும் ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த 20.05.2024–ம் தேதி தாவாச் சொத்தையும் S.No. 238/43–ல்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.18 15:43:48 +0530

கட்டுப்பட்ட தாவாச் சொத்தையும் அளந்து அத்துமால் காண்பிக்கப்பட்டு, அத்துமால் கல்காலும் சர்வேயர் முன்னிலையில் ஊண்டப்பட்டது என்றும், மேற்படி நில அளவையின் போது தாவாச் சொத்தையும் அதில் பிரதிவாதிகள் செய்துள்ள ஆக்கிரமிப்பும் உறுதியாகியது என்றும், தங்களுக்குப் பாத்தியப்பட்ட தாவாச் சொத்தின் வடக்குப் பக்கத்தில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தாவாச் சொத்தின் மேற்குப்ப பக்கம் கிழமேல் 4 அடி, தென்வடல் 2 அடி அளவிற்கு ஆக்கிரமித்து தனது வீட்டின் பாத்ரூமைக் கட்டியுள்ளார் என்றும், அதேபோல் இந்த நம்பர் 2-ம் எதிர்மனுதாரர்/ 2ம் பிரதிவாதி தாவாச் சொத்தின் தென்புறம் கிழமேல் மேல்புறம் 5 அடியும், கீழ்புறம் 8 அடியும் தென்வடல் 10 அடியும் ஆக்கிரமித்து ஓட்டு வீடு கட்டியுள்ளார் என்றும், மேற்படி பிரதிவாதிகள் தாவாச் சொத்தில் செய்துள்ள ஆக்கிரமிப்பு பகுதி எங்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும் மேற்படி ஆக்கிரப்பபை அகற்ற வேண்டியது நீதியும் நியாயமுமாகும் இல்லாது போனால் தங்களது தாவாச் சொத்தை அமைதியான முறையில் அனுபவிக்க முடியாத நிலை ஏற்படும் என்றும் 1,2 எதிர்மனுதாரர்கள்/ 1,2 பிரதிவாதிகள் ஆள்பலம் மற்றும் பணபலம் மிக்கவர்கள் என்றும், தங்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்தில் கட்டுப்பட்ட மேற்படி சொத்தின் வடக்குப் பக்கத்தில் 1ம் பிரதிவாதியால் ஆக்கிரமிக்கப்பட்ட தாவாச் சொத்தின் மேற்குப் பக்கம் கிழமேல் 4 அடி தென்வடல் 2 அடி அளவுள்ள பாத்ரூம் பகுதியையும் தாவாச் சொத்தின் தெற்கு பக்கத்தில் 2ம் பிரதிவாதியால் ஆக்கிரமிக்கப்பட்ட கிழமேல் மேல்புறம் 5 அடியும் கீழ்புறம் 8 அடியும் தென்வடல் 10 அடியும் உள்ள ஓட்டு வீடும் என 1,2 பிரதிவாதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட ஆக்கிரமிப்பு பகுதியை அளந்து பார்த்து அதில் ஆக்கிரமிப்புகளை ஆராய வேண்டி நீதிமன்ற ஆணையாளரை நியமித்து அவர் மூலம் தாவாச் சொத்தை சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு, அளந்து அதன் வகைப்பாடு கண்டு மற்றும் அதன் இயற்க்கை கூறுகளை ஆராய்ந்து அதிலுள்ள மேற்கோப்புகளையும் ஆராய்ந்து அறிந்து ஆக்கிரமிப்பு பகுதிகளையும் அத்துமால் கண்டு, ஒரு விரிவான அறிக்கையை தாக்கல் செய்ய சமூகம் நீதிமன்றம் நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க வேண்டியது நீதியும் நியாயமுமாகும் என்றும், இந்த மனு அனுமதிக்காது போனால் எனக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும், இதில் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எந்தவித ஆட்சேபனையும் இருக்க வாய்ப்பில்லை என்றும், எனவே மனு அபிடவிட்டை ஏற்றுக் கொண்டு தாவாச் சொத்தை அளந்து பார்த்து அதன் இயற்கை கூறுகளை ஆராய வேண்டி நீதிமன்ற ஆணையாளரை

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.18 15:43:54 +0530

நியமித்து அவர் மூலம் தாவா சொத்தை சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு, அளந்து அதன் வகைப்பாடு கண்டு மற்றும் அதன் இயற்கை கூறுகளை ஆராய்ந்து அதிலுள்ள மேற்கோப்புகளையும் ஆக்கிரப்பு பகுதிகளையும் ஆராய்ந்து அறிந்து, அத்துமால் கண்டு, வரைபடத்துடன் கூடிய ஒரு விரிவான அறிக்கையை தாக்கல் செய்து உத்தரவிட வேண்டி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு எதிருரையின் சுருக்கம்:–</u>**

மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையாளர் மனுவானது சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேற்படி மனுவின் அபிடவிட்டில் ஏதோ மனுச்சொத்ததானது 2–ம் மனுதாரர் / வாதிக்கும் பாத்தியப்பட்டு தாக்கலாகியிருந்த நிலையில், அவரது கணவர் மனுச்சொத்தில் குடிசை வீடு கட்டியும், அவர்களுடைய ஆடு மாடுகளை கட்டி வைத்தும், மனுச்சொத்தில் மரங்கள் நட்டுவைத்தும் தன் சொந்த அனுபவத்தில் வைத்து ஆண்டனுபவித்து வந்தாகவும், ஷை மனுதாரர் அவரது கணவருடன் அவரது வேலை விசயமாக கடந்த சில வருடங்களுக்கு முன்பு குடும்பத்துடன் வெளியூர் சென்றிருந்த நிலையில் 2–ம் எதிர்மனுதாரர் / 2–ம் பிரதிவாதி அவரது மனைவீட்டிற்கு வடக்கே அவரது வீட்டை ஒட்டி கிழமேல் 10 அடி, தென்வடல் 10 அடி அளவில் ஓட்டு வீடு ஒன்றை கட்டியுள்ளதாகவும், அதேபோல் 1–ம் எதிர்மனுதாரர் / 1–ம் பிரதிவாதி அவரது வீட்டிற்கு தெற்கே கிழமேல் 4 அடி தென்வடல் 4 அடி அளவில் பாத்ரூம் ஒன்றை கட்டியதாகவும், மனுதாரர்கள் /வாதிகள் சில காலங்கள் கழித்து அவரது வீட்டிற்குவந்து பார்த்தபோது 1 & 2 எதிர்மனுதாரர்கள் / 1 & 2 பிரதிவாதிகள் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்தவிபரம் தெரியவந்தது என்றும். மேற்படி சொத்தின் வடக்குப்பக்கத்தில் 1–ம் பிரதிவாதியால் ஆக்கிரமிக்கப்பட்ட தாவா சொத்தின் மேற்கு பக்கம் வடக்குப்பகுதியில் கிழமேல் 4 அடி தென்வடல் 2 அடி அளவுள்ள பாத்ரூம் பகுதியையும் தாவா சொத்தின் தெற்கு பகுதியில் 2ம் பிரதிவாதியால் ஆக்கிரமிக்கப்பட்ட கிழமேல் மேல்புறம் 5 அடிம் கீழ்புறம் 8 அடியும் தென்வடல் 10 அடியும் உள்ள ஓட்டுவீடு ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறியுள்ளார் என்றும், ஷை சங்கதிகள் யாவும் பொய்யானது மற்றும் கற்பனையானதாகும் என்றும், மேலும் ஷை மனுவில் ஏதோ மனுதாரர்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்தில் கட்டப்பட்ட ஷை சொத்தின் வடக்கு பக்கத்தில் 1–ம் பிரதிவாதியால் ஆக்கிரமிக்கப்பட்ட தாவாச் சொத்தின் மேற்குப் பக்கம் வடக்குப் பகுதியில் கிழமேல் 4 அடி தென்வடல் 2 அடி அளவுள்ள பாத்ரூம் பகுதியையும், தாவாச் சொத்தின் தெற்குப் பகுதியில் 2–ம்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.18 15:44:00 +0530

பிரதிவாதியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கிழமேல் மேல்புறம் 5 அடியும் கீழ்புறம் 8 அடியும் தென்வடல் 10 அடியும் உள்ள ஓட்டு வீடும் என 1 & 2 பிரதிவாதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதியை அளந்துபார்த்து, அத்துமால் கண்டு, ஒரு விரிவான அறிக்கையை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க வேண்டியுள்ளது. சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், மேலும், இம்மனுவின் அபிடவிட்டில் மனுதாரர்கள் / வாதிகள் கூறியுள்ள மற்ற சங்கதிகளை நாங்கள் வன்மையாக மறுக்கின்றோம் என்றும், தாவா சொத்து மனுதாரர்கள் / வாதிகளுக்கு சொந்தமானதென்பதை வையார்கள் நிரூபிக்க கடமைப்பட்டவராவார்கள் என்றும், தாங்கள் தெரிவித்துக்கொள்வது யாதெனில், இம்மனுவில் மனுதாரர்கள்/வாதிகள் கூறியுள்ளதுபோல் நாங்கள் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவுமில்லை என்றும், தங்களுக்குப் பாத்தியப்பட்ட மனையிடத்தில் மட்டுமே கட்டுமானம் செய்துள்ளதாகவும், இந்நிலையில் மனுதாரர்கள் / வாதிகள் Evidence Collect செய்ய வேண்டித் தாக்கல் செய்துள்ள இம்மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும் என்றும், எனவே, நீதிமன்ற ஆணையாளர் நியமன மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3)இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா என்பதே ஆகும்?

4)இருபுறமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவார்கள். மனுதாரர்கள் சார்பாக 1ம் மனுதாரர்/1ம் வாதி தனக்காகவும், 2ம் மனுதாரர்/2ம் வாதிக்காகவும், இந்த நிர் மனு அபிடவிட்டை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியமுடையது என்றும், தாவா மொத்த சொத்தில் 1ம் பிரதிவாதியால் மேற்கு பக்கம் வடக்கு பகுதியில் கிழமேல் 4 அடி, தென்வடல் 2 அடி அளவுள்ள பாத்ரூம் 2ம் பிரதிவாதியால் ஆக்கிரமிக்கப்பட்ட கிழமேல் மேல்புறம் 5 அடியும், கீழ்புறம் 8 அடியும், தென்வடல் 10 அடியும் உள்ள ஓட்டு வீடு என 1, 2 பிரதிவாதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட ஆக்கிரமிப்பு பகுதியை இடித்து அகற்ற செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிட கோரி இந்த நிர் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தாவா சொத்தை அளந்து பார்த்து அதில் ஆக்கிரமிப்பு உள்ளதா இல்லையா என்பதை பொறுத்து ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யும்பட்சத்தில் வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள் கேட்டுள்ள

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.18 15:44:05 +0530

பரிகாரத்தை தீர்மானிப்பது எளிதாகக்கூடும் என மனுதாரர்கள் தரப்பில் ஆணையர் நியமிக்க பிராத்தித்து வாதுரை எடுத்துரைக்கப்பட்டது.

6) மாறாக, 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் எதிருரை அபிடவிட்டு தாக்கல் செய்யப்பட்டு இதர எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டுள்ள எதிருரை அபிடவிட்டில் தாவா மனுவும் சாட்சியம் திரட்டுவதற்காக தாக்கல் செய்திருப்பதாகவும், 1, 2 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லும் சங்கதிகள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்றும், ஆணையர் நியமனம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

7) இருபுறமும் கேட்கப்பட்டதிலிருந்தும், வழக்கு கோப்பினை பரிசீலனை செய்த வகையிலும், மனுதாரர்கள்/வாதிகள் கோரிய படி ஆணையர் நியமனம் செய்ய வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அதன்படி சமூகம் நீதிமன்ற வழக்கறிஞர் திரு.A.நாகராஜன் அவர்கள் ஆணையாளராக நியமனம் செய்யப்படுகிறார். மேற்படி ஆணையர் தாவா ஸ்தலத்தை பார்வையிட்டு தாவா சொத்தை சர்வேயர் கிராம நிர்வாக அலுவலர் உதவியோடு அளந்து பார்த்து அதன் இயற்கை அமைப்பு பொறுத்தும் ஆக்கிரமிப்பு பகுதிகளில் உள்ளதா என்பது குறித்தும், மேற்கோப்புகளை பார்வையிட்டும் வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. ஆணையர் ஊதியமாக ரூ.3500/- ஐ நேரடியாக ஆணையரிடம் இன்றிலிருந்து 10 தினங்களுக்குள் மனுதாரர்கள் செலுத்தி வைக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க-18.04.2026

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026-ம் வருடம் மார்ச் மாதம் 18-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.18 15:44:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

| |
|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.18 15:44:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்
IA No.2/2024 in OS no.43/2024
உத்தரவு
நாள்:18.03.2026